

ஓலை 197| ஓசை 320| அக்டோபர் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவிஞர் வாணிதாசன்

கவிதை வார இதழ்

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

பொருள்

முதலில் தான் சமமாக நின்று, பின் தன் மீது வைக்கப்படும் பொருளின் எடையைத் துல்லியமாகக் காட்டும் தராசு முள் போல, எந்தப் பக்கமும் சாயாமல் நடுவுநிலைமையோடு நடப்பதே சான்றோர்களுக்கு அழகாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



பாவகை : கிளிக் கண்ணி

அருள்நெஞ்சம் கொண்டெங்கும் ஆல்போலே வளர்த்தவரே!
அருந்தமிழை மரபாலே - கிளியே
அன்புடனே காத்தவரே!

கம்பரைப்போல் இளங்கோபோல் காலமுழுதும் வாழ்பவரே!
செம்மொழியைக் கற்பித்தே -கிளியே
சிந்தையின்பம் சேர்ப்பவரே!

யாப்பினையே கற்கவைத்தே யாதுமாகி நின்றவரே!
பாப்புனைய வைத்தெம்மை - கிளியே
பண்படுத்தி வளர்த்தவரே!

நாள்தோறும் கடமையாற்றி நற்றமிழை வளர்த்தவரே!
வாள்போலும் கூரொளியாய் - கிளியே
வல்லவராய் வாழ்பவரே!



தமிழமிழ்தம் தந்திட்ட தண்டமிழ் நாயகரே!
தமிழின்பம் அளித்திடவே - கிளியே
தனித்தமிழைக் காத்தவரே!

பன்முகப் பாவலராம் பைந்தமிழர் நெருப்பலையார்
நன்மரபுப் பாவலரைக்- கிளியே
நாள்தோறும் வளர்த்திட்டார்!

தனித்தமிழைக் கற்பித்தே தாய்போலே செயல்பட்டார்!
தனியாக முயற்சித்தே - கிளியே
தனித்தமிழைக் காத்திட்டார்!

புரியாமல் கேட்டிடவே புரிகின்ற படிசொல்வார்!
அரிதாகப் பிறந்தவரை-கிளியே
அனைவருமே புகழ்சொல்வார்!

பண்புடனே நடந்திடுமெம் பாவலரைப் பணிந்திடுவோம்!
எண்ணமெல்லாம் நெருப்பலையார் - கிளியே
இருக்கின்றார் மகிழ்கின்றோம்!

கவிஞர் முனைவர் மு. செல்வி, தூத்துக்குடி

பாவகை : எட்டடி பஃறொடை வெண்பா

உயிராய்ப் பிறந்தே
உணர்வில் கலத்தல்
உயிருடன் மெய்யும்
உயிர்மெய் உருவம்
உயிர்ப்பாய் ஒலித்தே
உலகையே ஆளும்
அயிர்க்கல் விலக்கி
அரங்கில் உலவும்
உயிர்க்கும் அறிவை
உரமாக்கும் சித்தம்
உயிர்மருந்தாய் நின்றே
உரப்பொலி நல்கும்.
உயிரச்சம் போக்கி
உயர்நிலை பெற்ற
உயிரொழிதல் இல்லா ஒலிப்பு .



அயிர்க்கல்-ஐயம்

கவிஞர் செ. கலைவாணி

க. செம்மை நினைவுகள் நெஞ்சம் நிறைந்திருக்க
வெம்மை தணியுறும் நாடு.

உ. கழிந்த பொழுதெண்ணிக் கண்ணீர் உகுக்க
வழியின்றி நைந்தது நெஞ்சு.

ங. அறம்பிறழ் நெஞ்சம் இழைத்த வழுக்கள்
நிறமாறும் தென்னவன் நாடு.

ச. ஒழுக்கம் கழிந்து ஒடுங்கும் உகுவோர்
அழுங்கல் பெருகும் நிலம்.



தடம்

நீ வந்துபோன
வழித்தடத்தை
காட்டி விட்ட
உன் கால் கொலுசுகளுக்கு
நன்றி.
என்னறை முழுவதிலும்
நீ சிரிப்போடு
உதிர்த்துப் போன
சொற்கள் தணிக்கையின்றி
காத்திருக்கின்றன
எனது பதிலுக்காக.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

எத்தனை எத்தனை உறவுகள்
எம்மை நோக்கி வந்தபோதிலும்,
நண்பர்கள் எனும் உன்னதம்
கசந்துபோய்விடாது வாழ்வில்!



என்னென்னவோ பகிடிகள்,
எண்ணத்தைத் தொடாத
விடலைப் பேச்சுகள்,
எப்போதுமே எம் மனதைத் தொட்டவர்கள்!

கண்டவரிடம் கதைபேசிக்
கண்கலங்குவதைவிட,
கண்ணான நண்பர்களிடம்
ஆறுதல் தேடுவதென்னவோ ஆழ்ந்த சுகம்!

வாழ்வு சிறக்க,
வண்ணக் கதைகள் பேசி மகிழ,
நல்ல நண்பர்கள் வட்டம் போதும்
எம் எண்ணங்களை வலுப்படுத்திக்கொள்ள!

கனத்த மனதினைக்
கணப்பொழுதில் சிரிப்பால் மகிழவைத்து,
சிங்காரக் கதை பேசி
லேசாக்கிவிடுவதில் கில்லாடிகள்!

ஏளனங்கள் எம்மைச் செய்ததில்லை,
ஏடெடுத்துப் படிக்கும் வரை!
எம்மைவிட்டுத் தூரமாகும்
எந்த நண்பனையும் இறுகப் பிடித்துக் கொள்வதில்
எங்களை மிஞ்சியவர் எவரும் இலர்!

வாழ்வில் நாம் கண்ட மிச்சங்கள்
எம் நண்பர்கள்!
எதை விட்டுச் சென்றாலும்,
பழகிய பருவ நினைவுகள் நண்பர்கள்தான்!

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

நான் யாருக்குமே வேண்டாமா?



தீராத காதல் என்றுதான் நம்புகிறேன்...
காதலால் மோதல்...
தேவையற்ற உறவாகவும்,
காதல், காதல் எனத் தொல்லை செய்து,
நானே தூரமாய்ச் செல்ல வைத்த
தருணங்கள்...

முன் அந்தி இனித்தலில்,
பின்னே உதித்த கதிரில்,
உயிரின்றி ஏதோ ஏக்கத்திற்குக்
கிடைத்த பிண்டம் யானென
அகத்தின் பதற்றம்.

வார்த்தைகளில் ஆழ்ந்தே கிடந்தாலும்,
அனுதினம் வார்த்தைக்கு
ஏங்கும் இரைச்சலாய் மாறினேன்.
வெறுத்த காயங்கள் இரணமாய்,
ஒட்டாத வாக்கியங்களில் ஏதோ எண்ணம்
நான் யாருக்குமே வேண்டாமா?

கண்கள் இருண்டு,
பாதம் நிற்கத் திறனின்றிச் சோர்வுற,
ஆகாயம் பார்த்த விழியும்,
இழுத்துவிட்ட மூச்சுடனும்,
இரவுகளைக் கடந்திட முடியாமல்
முடித்து எழுகிறேன்.

நான் எதைத் தான் தேடுகிறேனோ
தெரியாமலே தொலைந்தே,
விழியோரமாய் வழியும்
நீர்த்துளியும்... என் தலையணையும்...

சிலருக்குப் புரிந்திட நேரமில்லை;
சிலருக்குப் புரிந்துகொள்ள விருப்பமே இல்லை.
என்னை நானே முதலில் புரிந்துகொள்ள
முயற்சி செய்வதில்
முழுத் தன்னம்பிக்கையற்று,
தாழ்வு மனப்பான்மையோடு
கடந்திடும் நிமிடம்,
வலியை இன்னும் தூண்டுகிறதே தவிர,
குறைத்த பாடே இல்லை.

தீராத குழப்பவாதி நான் தானோ?

கவிஞர் ச. கார்த்திகா, பழநி

யுகாந்திரங்களை உருக்கி
தாகம் தீர்த்துக்கொள்கிறது
நம் காதல்.

பருகிய பின்னும்
தீர்வதாயில்லை
தாகம்.

அது காதலின் தாகமல்ல;
உன்னை இன்னும் இன்னும்
நேசிக்கத் துடிக்கும்
எனதான்மாவின் விடாய்!



கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

இன்றிரவு தீட்டிய நிலவுக்குள்
தொங்கிக் கொண்டிருக்கிறது
அகன்றெழாத நேசம்!

மப்பு மந்தாரம் சூழச் செப்பனிப்பட்டிருக்கும்
வானம் போன்றது என் மனம்
சில உணர்வுகளைக் கடந்தெழுந்து நெகிழ்ந்து
வந்து கவிதை காயப்போட முடியாதளவுக்கு மழை
அகோரம்!

விரவிக் கிடக்கும் தனிமைக்குள் வெந்து
நொந்துச் சாம்பலாகிச் சிதையும்
பின்னந்திகள் மறுபடியும் சுழன்றெழுந்து வந்து
ஊஞ்சலாய் ஆடச் சொல்கிறது



நிறைகுடத்தினது நீருக்குள்
நீந்தி மிதக்கும் மல்லிகைகளை போல
மணப்பதில்லை வாழ்வு
அதையும் தாண்டி
வாழ்ந்தாக வேண்டி இருக்கும்
வேடிக்கைகளுக்கு வர்ணம்
தீட்ட நிறங்கள் இல்லை!

இறந்து கொண்டிருக்கும்
எனது ஆன்மா ஒரு நடை பிணம்!

கவிஞர் நிஹ்லா மாவனல்லை

அகவெளி முழக்கம் ஆன்மாவின் எல்லை
சொல்லில்லா இடத்தில் தொடங்கும் புள்ளி
பிரபஞ்சத்தின் கனல் விழிந்து எழுகிறது
பேச்சு என்பது காற்றில் உதிரும்
மௌனம் காலம் கடந்த கல்வெட்டு
அமைதியின் மடியில் உறங்கும் தனிமை
உள்ளுணர்வு பேசிடும் உன்னத அற்புதம்
விடைத் தேடி அலைந்த விழிகளுக்கு
கிடைத்த ஆத்ம மௌனச் சாட்சி
மௌனத்தின் கடைசிப் பக்கத்தை வாசிப்பவன்
மரணத்தையும் தாண்டிய அமரத்துவம் ஆகிறான்



கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருது நகர்

சகியின் புன்னகையில்
சகலமும் மறந்தேன்
நர்த்தகியின் நளினத்தை
நாளும் சுகிக்கிறேன்

ஆரணங்கின் பேரழகில்
ஆனந்தம் அடைகிறேன்
காரிகையின் பார்வையது
காந்தமாய் ஈர்த்திட்டதே

வனிதையின் வனப்பினில்
வசியமானேன் நானே
நங்கையுனது நாணத்தால்
வசமானேன் அன்பே

பாவையே உனது
பாசமதில் பரவசமே
வஞ்சியின் கொஞ்சலில்
வசமிழக்கிறேன் நித்தமும்



இளையாளின் இதயத்தில்
இசைவாகிப் போகிறேன்
மாதுவின் நினைவாலே
மாற்றமது என்னிடத்தில்

பூவைச் சூடிய
பூங்கோதை இவளே
வனிதையின் வாசத்தில்
வஞ்சனை ஏதுமில்லை

மழலையெனக் கவர்ந்தாய்
மாசற்ற அழகியே
சுந்தரியே பாடுகிறேன்
சுந்தரத் தமிழாலே

யுவதியே உன்னுடன்
யுகங்களாய் வாழ்ந்திருப்பேன்
தையலே தையலால்
தைத்திட்டாய் இதயத்தையே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

ஆயக்கலைகள் அறுபத்து நான்கை வளர்க்கும்
அன்னையவள் படைப்பின் தேவனாம் பிரமனின்
ஆன்ற நாவினில் குடியிருப்பவளா மவளருள்
அவனியில் பெற்றோர் ஆன்ற அறிஞராவரே!

கலைமகள் என்பது அன்னையின் திருப்பெயராம்;
குமரகுருபரர் சகலகலா வல்லியென அன்னையவளை
குவலயம் போற்ற பாடிப் பரவினாரே!
சகலகலா வல்லியருள் பெற்றவர் பலராமே;
சானகி மணாளனைப் போற்றிய கம்பனோடு
சண்டையிட்ட தமிழ்ப்புலவன் ஒட்டக் கூத்தனும்
சகலகலா வல்லியைக் கூத்தனூரில் வணங்கினானே!



காளமேகப் புலவருக்கு அருளியவள் கலைமகளாமே;
குருராக வேந்திரருக்கும் அருளியவள் கலைமகள்தானே
குவலயம் சிறக்க அத்வைதம் தந்த
குருஆதி சங்கரருக்கும் அருளியவள் கலைமகளே!
கவிச்சக்கர வர்த்திகம்பரும் கலைமகள் பெருமையை
கவிதையில் சரஸ்வதி அந்தாதியெனப் பாடிப்பரவினாரே!



ஐந்து வயதுவரை ஊமையாய் இருந்து
ஐயன் முருகன் அருளால் பேசலுற்று
ஐவகை நிலம்வாழ் தமிழரின் தனிப்பெரும்
ஐயனை கந்தர் கலிவெண்பாவால் பரவினாலும்
சைவம் வளர்க்க காசி சென்று
பைந்தமிழ் மடமொன்று அமைக்கவிடம் வேண்டி
பாஷாவை சந்தித்து அவரிடம் பேச
பாஷை இந்துஸ்தானி அறிவு வேண்டி
பாடினார் கலைமகள் மீது சகலகலாவல்லி
பாமாலை யதனைக் கேட்டு மகிழ்ந்தவள்
பாவலரவருக் கிந்துஸ்தானி மொழியறிவு வழங்கியதோடு
பாராளும் மன்னன் அரண்மணைக்குள் அரிமாவாக
பிரவேசித்தாள் குமரகுருபரைத் தன்முதுகில் சுமந்தே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

மடிந்து போகுதே
விடைகள்
எங்கே தேடுவது வினாக்களை?

தேய்பிறையாயிடும்
எண்ணங்களும் கனவுகளும்...
வாதமிடும் மனதோ
ஓலமிடுகிறதே?

கேட்டவைகள் எல்லாம்
கேள்விவழிகளா?
பிந்தியதால் முந்தைய
வேள்விகளா?

காலச்சக்கரம் சிதைத்திடும் சிந்தைகளிலா
நகர்ந்து கொண்டிருக்கிறதோ
கணங்கள்

தோற்றவைகள்
வெற்றியைத் தேடாமல்
இன்னுமா பாழடைந்த
ஓடைகளில்.

பள்ளத்தாக்குகளை தேடும்
மலையின் அருவிகளாய்.
இன்னும் ஏக்களோடு
தடயங்களைத் தவிர்க்கும்
விடுகதைகளாய்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

முன்னேற்ற பாதைக்கு முயற்சிதான் வேண்டுமே
பெற்றோர்கள் ஆசிரியர்கள் தலைவர்கள்
வழிகாட்டல் வாழ்வில் இனிமை பிறக்குமே.

ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியின் வழியே தந்திடும்
உழைப்பே வெற்றியின் முதல் படியாகும்.
தலைக்கனம் இல்லா அன்பின் வழியே
உயர்வென்னும் பாதைக்கு ஒளி தரும் வழியே.

ஒவ்வொரு நாளும் மணித்துளிகளும் நொடிகளும்
பொன்னாய் போற்றும் எண்ணம் வேண்டும்.
வெற்றி என்னும் மகுடம் தான் நம்மை வந்து சேருமே.

வாழ்க்கை என்றும் கடல்தான்
வாழும் காலம் போர்க்களம்தான்
தன்னம்பிக்கை கொண்டே போராடும் எண்ணம்தான்
வாழ்வில் வந்து சேருமே வெற்றி என்ற விருதுதான்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு



வாழ்க்கைப் பாதையில் விழிப்போடு இருங்கள்
வந்திடும் மாற்றங்களில் தெளிவோடு இருங்கள்
இன்ப வேளைகளில் இறுமாப்பைத் தவிருங்கள்
துன்ப நேரங்களில் துவண்டிடாமல் எழுங்கள்

காலத்தின் ஓட்டத்தைக் கருத்தில் கொள்ளுங்கள்
கடமைகள் அனைத்தையும் கண்ணியமாகச் செய்யுங்கள்
நம்பியவர்களாயினும் நிதானமாகப் பழகுங்கள்
நன்மையா, தீமையா என நன்குணர்ந்து செயல்படுங்கள்

பகலாயினும் இரவாயினும் பாதுகாப்பு நிலையானதல்ல
பதவியும் பணமும் நிலையான சொத்துகள் அல்ல
உறவுகள் பிரியலாம்; உண்மைகள் மாறலாம்
உயிர் பிரியும் நொடியில் உலகமே மறைந்துபோகலாம்

கோபத்தை வெல்லுங்கள்; குணநலனைக் காத்திடுங்கள்
பொறுமையை வளர்த்து, பொன்னான வாழ்வை அமைத்திடுங்கள்
மரணம் வரும் நேரம் மனிதருக்குத் தெரியாது
மறுமையை மறந்தோர்க்கு வாழ்விலும் தெளிவேது

ஒவ்வொரு நொடியும் இறைவனை நினைத்திடுங்கள்
உண்மையின் வழியில் உறுதியுடன் நடந்திடுங்கள்
விழித்திருக்கும் போதே வினைகளைத் திருத்திடுங்கள்
வாழ்வின் இறுதிவரை விழிப்போடு இருங்கள்.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த, கலேவெல

வாப்பா எனும் வானம்

வாப்பா என்ற சொல்லில் வாழ்கிறது அன்பு
வானம் போல் விரிந்தது அவர் தந்த நெஞ்சு

சொல்லாமல் சுமந்த சுமைகள் ஆயிரம்
சொல்லி முடியாத தியாகம் அவர் தினம்

வியர்வையை உதிர்த்து விளைவித்த வாழ்வு
விழிகளில் மறைத்து வைத்த துயர் தாழ்வு

கைகளில் காயங்கள் கவிதையாய் மின்னும்
கண்களில் கனவுகள் நமக்காக மின்னும்

அதட்டலில் கூட அர்த்தங்கள் உண்டு
அன்பினைப் பூசிய கண்டிப்பு அது

தோள்களில் தூக்கி வானம் காட்டியவர்
தோல்வியில் தாங்கி நம்பிக்கை ஊட்டியவர்

வாப்பாவின் பாதம் சொர்க்கத்தின் வாசல்
வாழும் வரை அவர் பெயர் நம் சுவாசம்

இருக்கும் போது உணர்வோம் அவர் அருமை
இழந்த பின் தேடுவோம் அந்தப் பெருமை

வாப்பா எனும் தெய்வம் வாழும் வரை
வாழ்க்கை எனும் பயணம் வசந்தம் தானே



கவிஞர் நஸ்ரினா, குருனாகல் (இலங்கை)

எழுத்தைக் கூட்டி சொல்லைக் கோர்த்து
சொல்லின் உள்ளே பொருளைப் பூட்டி
செதுக்கிய சிற்பமாய் சொற்களின் பயன்கள்..

நலம் தரும் சொற்கள் கொட்டிக் கிடக்க
நயனில் சொற்கள் தேர்வது வீணே

சொல்லும் சொல்லே சொல்வோரின்
குணங்கள் இதுவென்று காட்டிவிடும்.

பண்பும் பயனும் நீங்கிய சொற்கள்
நாடும் நல்லறிவையும் தேடும் நற்குணத்தையும்
தூர ஓடச் செய்திடும்



சீரும் சிறப்பும் உடைய சான்றோரும்
கூறும் சொல்லின் கூர்மை தவறிட
குறைந்து விடுவர் தங்கள் மதிப்பில்

கடுமையான வார்த்தைகளும் சரியெனவாகும்
கீழான சொற்களின் முன்னே

ஆன்றோர் அவையில் சான்றோன் ஆக்குதல்
ஆக்கம் தரும் சொல்லின் மகிமை

சொல்லும் சொல்லைச் சொல்லிவிடுவோம்
வெல்லும் சொல்லாக

கவிஞர் கீர்த்தனா பு, கோபிச்செட்டிப்பாளையம்

ஜன்னல் ஓர மழை

மழையின் வருகையை
அறிவித்தது முகில்க் கூட்டம்,

மழைத்துளிகள் பூமியைத்
தொட்ட போது, மண்ணின்
வாசனை மக்களின்
சுவாசத்துடன் கலந்தது,

தவளைக் கூட்டம் ஓசை எழுப்பி
மழையை வரவேற்றது,

மழையில் நனைத்து கொண்டு
குதூகலித்தது சிறுவர்க் கூட்டம்,

பயிர்கள் மீது விழும்
மழைத்துளியைப் பார்த்து
சிரித்தனர் விவசாயிகள்,

தனிமையை நாடிய என் உள்ளம்,
ஜன்னல் ஓர மழையை ரசித்த
போது பிறந்தது இந்தக் கவிதை,

மனம் எல்லோருக்கும்
ஒன்று தான், அதை ரசிக்கும்
விதம்தான் வேறு!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா நிம்ஸியா, மூதூர்-01

இசையுலக மேதையாய் இசையமைத்த வித்தகன்
எளிமையாய் இருந்ததே மனதுமே ரசித்ததே
இயல்பாக அமைந்ததே ரசனையைத் தந்ததே
தென்னகத்து இசைப்புயலாய் வங்கத்தை மிஞ்சியவன்!

ஓவியனாய் துவங்கிய கலைப் பயணம்
காவியம் படைத்த கலையுலக கலைஞன்
மீட்டிய இசையெல்லாம் நாட்டியம் ஆடியதே
கிராமப்புற சிந்தனையை இசையாக்கிய பேரறிஞன்!

சென்னலயின் பிறப்பிடமாய் கானாவை வளர்த்தவன்
ஆட்டோகாரன் பாடலையும் படையப்பா பாடலையும்
அனைவரையும் இசையாலே கட்டிவைத்த கலைஞன்
பக்தியையும் பாட்டினிலே ஊட்டிவிட்ட இசைபக்தன்!



தேவாவின் புகழ் பாடுது கானாவாக
ராகம் தாளம் பல்லவியுள்ள இசைமழையே
வானம் பாடியாய் பாடலிலே வாழ்ந்தவன்
மறைந்தாலும் மானுடம் மறக்காத இசைப்பேரரசன்!

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன்

1.
உதிர்ந்தால் உதிரட்டும்
மயிர்தானே என்று அலட்சியமாகப்
பேசாதீர்கள்.
மானுக்கு அது மானம்.
மனிதர்க்கு அல்ல.

2.
கோடரிகளின் கண்களுக்கு
புலப்படுவதேயில்லை.
ஒவ்வொரு மரத்திற்குள்ளேயும்
புத்தன் இருப்பது.

3.
பெருமழைக்கு அஞ்சி குளிரில்
நடுங்கும் மயில்களுக்கு
நான் எப்படி பேகனைப்போல்
போர்வை தரமுடியும்?
நானோ வீடில்லாமல் வீதியில்
வாழும் பிச்சைக்காரன்.

4.
பறவைகளால் இடப்பட்ட எச்சங்கள்
பூமிக்கு வழங்குகின்றன.
ஒரு விருட்சத்தை.

5.
கருவறையில் கடவுளை காணவில்லை என்று
பூசாரி பதறிப்போய் வெளியில் வந்து பார்த்தார்.
கோவிலுக்குள் நுழைய அனுமதி
மறுக்கப்பட்டவர்களோடு
உரையாடிக்கொண்டிருந்தார்.

6.
அப்பாவை முதியோர் இல்லத்தில்
சேர்த்த கோபம் இன்னும் தீரவில்லையோ?
அமாவாசையன்று மொட்டைமாடியில் சாதம் வைத்து
அழைத்து காகம் வரவில்லையே.



7.
சாவது இந்த உலகில் எளிது.
வாழ்வதுதான் கடினம்.
யாரையாவது திட்ட முடிவெடுத்தால்
வாழ்ந்துவிட்டுப்போ
என்றுதிட்டுங்கள்.

8.
ஆயுத பூசைக்காக பொருட்கள்
வாங்க செல்கையில் பெரும்
நெரிசலில் சிக்கிக்கொண்டே
திக்கி திணறிப் பாடிக்கொண்டே
நகர்ந்து சென்ற பார்வை
இல்லாதவன் கையில் இருந்த
உண்டியலில் பணத்தை எல்லாம்
போட்டுவிட்டு வெறுங்கையோடு
திரும்பினேன்.
இறைவன் அளித்த
வாழ்த்துச் சிறகுகளை சுமந்தபடி.

கரைந்தோடி நித்தம் மனதில்
கரை தேடும் கானலாகி
கிறங்கித்தான் நின்றனள்

கவிபாடும் கவிதை நீயடியென
கண்ணாடி தினம் கண்சிமிட்டி சீண்டியும்
கதை பேசத் துடிக்கும் கண்களில்
வற்றாத ஆவல் கொண்டனள்!





1
உன் இருப்பு என்பதென்பது
பள்ளியோ வீடோ.
எதுவாயினும்
என்னுடன் வருவது
தினமும் வழியனுப்பும்
உன் புன்னகை ஆயுதமல்லவா.
அதுவேதான் எனக்கான
வழியாகவும் மாறிவிடுகிறது.

2
பாட்டி கதைகளில் வளர்ந்த எனக்கு
சுட்டிக்கதைகளைச் சொல்லி மழலைப் பருவத்தை
மீட்டெடுக்கிறாள் மகள்.
இப்பொழுதெல்லாம்
எங்கள் சந்திப்பைப் பார்த்ததும்
யாரைக் குழந்தையென்பதென
குழப்பத்தில் தவிக்கிறாள் அம்மா.



3
நதிகளின் வருகை
கடலுக்கு வலுச்சேர்த்தே
விளைவிக்கும் முத்தைப் போல
மழைத்துளிகளின் வருகை
நகர்ந்திடும் நதிக்கு
வரலாறெழுதிச் சென்றிட
மேகத்தின் கூடலும் ஊடலும்
வானத்தின் தானத்தை விரைவாக்கிட
மகிழும் பூமியின்
உயிர்ப்பைப் போல
மகளன்பில் மூழ்கிப் போகிறேன்
உப்புக் கரிக்கும் சுவையோடு.

தொட்ட தொழிலில் திறமையைக் காட்டி
விடா முயற்சியால் வெற்றியை நாட்டும்
பாட்டாளிகளின் கரங்கள் தொட்டது துலங்கும்!
பெருமை தேடாமல் பிறர்க்குதவும் கரங்கள்
அரவணைத்து அன்பைப் பொழிந்திடும் கைகள்
வறியோரின் பசியாற்றும் வள்ளலில் கரங்கள்
பிறரின் கண்ணீரைத் துடைத்திடும் கரங்கள்
சிற்பங்களை உருவாக்கும் சிற்பியின் கைகள்
ஒப்பற்ற ஓவியங்களை தீட்டிடும் கைகள்
நற்கவிதை படைக்கும் கவிஞனின் கரங்கள்
அற்புத உழைப்பாளி உழவனின் கரங்கள்
இசைமீட்டி இதயங்களை ஈர்த்திடும் கரங்கள்
சேவையில் சிறந்த செவிலியர் கரங்கள்!
தன்னம்பிக்கை, எண்ணத்தில் திண்ணம், தடைகளைக்
கண்டு தளராமல் முயற்சியைத் தொடர்ந்திடும்
கரங்களென் தொட்டது துலங்கும் கைகளின்
பட்டியல் நீண்டிடும் பற்பல விதங்களிலே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

அதிகாலையில் துயில் எழுவாள்.
ஆறிய தேநீரை அருந்த நேரமில்லை.
இல்லத்தில் செலவுகளை சிக்கனமாக செலவழிப்பாள்.
ஈட்டிய செல்வத்தை இரட்டிப்பாக சேமிப்பாள்.
உள்ளத்தின் ஆசைகளை மறைத்திடுவாள்.
ஊதியம் பெறாத பணிப்பெண் இவளே.
எதிரியையும் மௌனத்தால் கடந்திடுவாள்.
ஏகாந்தம் எதுவென்று மறந்திடுவாள்.
ஐம்பதிலும் ஓய்வு காணாது உழைப்பில்
ஒவ்வொரு உறவையும் பேணிக்காக்க
ஓடி உழைத்த ஓட்டம் -எல்லாம்
ஓர்நாளில் அடங்கும்.
ஔவை வயது வரும் முன்னே
அவளை கவனிக்க யாரும் இல்லை.
எஃகு போல் இருந்த மனம்
மெல்ல, மெல்ல அச்சம் தரும்.
பிறர்க்காகவே வாழ்ந்த வாழ்க்கை
தனக்கென ரசித்து வாழாத
இல்லாளின் ஏக்கம் புதைந்து தான் போகிறது
அவளுடன் சேர்ந்து மண்ணுக்குள்ளே.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

முடிவில்லா அன்பில்
வரமாகக் கிடைத்த
பொக்கிஷம்
நம் நட்பு,

நட்பின் அதிகாரம்
அவளவன்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

தளம் பற்ற
தகுந்த திறனோடு
தன்னம்பிக்கை தான்
தனது நிலை கொண்டு
தன்னிலை உயர்த்த
தக்க இடம் காண
தனியே வந்த பெண்களை
தலைகன மாந்தர்களின்
தலைமை கீழ் பண்பால்
தனை மறைத்து
தனது நாமமும் மறைத்து
தன்னுலகம் மறந்து
தனக்காக அல்லாமல்
தனை சார்ந்தவருக்காக
தரணியில் வாழும்
தங்க மங்கைகளே
தனக்காக சில நேரங்களில்
தனித்து ஒதுக்கி வாழுங்கள்
தங்கள் வாழ்க்கை ஒரு முறை தான்



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

இல்லாத நினைவுகள்

இரண்டு கோப்பை தேநீர்
ஒன்று மட்டும் ஆறுகிறது.

நீண்ட மௌனம்

அவன் இல்லாத வீடு
சுவரில் மட்டும் இருக்கிறது
அவன் நிழல் பூட்டிய அறையில்
எரிந்து கொண்டிருக்கிறது
விளக்கு



காய்ந்து போன செடிக்கு
தினமும் தண்ணீர் ஊற்றுகிறாள்
அம்மா

பேசாத தொலைபேசி

அருகிலேயே வைத்திருக்கிறேன்
ஒரு பெயருக்காக

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், இலங்கை

அனைவரையும்
தொட்டுத் தழுவி விலகிய

தென்றலை யாரென
எப்படி அறிவது



கணிக்க முடியாத
கண்கட்டி வித்தைக்காரி

துளிர்த்த தளிர்களில் அமர்ந்து
மெத்தன சிரிப்பில்

குலுங்கிய குறும்பில்
மனம் செல்லமாக கோபித்தது

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

வாழ்க்கை என்னும்
போர் வெளியில்
சுழன்றடிக்கிறது
சூறாவளி.
அணைந்துவிடாமல்
துடிக்கிறது பெண் சுடர்.



எங்கும் நகரமுடியாத,
பெருஞ் சுமைகள்.
சிரசிலே குடும்பம்
இடுப்பின் சுமையென
தொழில்.
கால்களில் மிக்சியும் கிரைண்டரும்.

காலம்
பழமையை மாற்றி
நவீனத்துவ சுமைகளை
திணித்துவிட்டிருக்கிறது.
பெண் சுடர் மட்டும்
பாதுகாப்பற்ற
வெட்ட வெளியில்தான்.

வசைகளாலும் ஏவல்களாலும்
விதித்தல்களாலும்
கட்டளைகளாலும் ஆன
சூறாவளியில் சிக்கி
அணைந்துவிடாமல்
துடிக்கிறது பெண் சுடர்.

நன்றாக
ஓடுபவர்களே
பெரும்பாலும்
மனதிற்கு
சக்கர நாற்காலி
போட்டுக்கொள்கிறார்கள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

கடிதம் 05

நீ வாசிக்காத என் பக்கங்கள்

ஆழ்மனதில்குடியேறிப்போன உன்னை
தூக்கி எறியும் வழிகலேதுவும் இல்லை.
சிம்மாசனமிட்டு நினைவுகளில்
தொங்கிக் கொண்டிருக்கிறாயே.
வெறுமையாய்நான் நின்றபோதெல்லாம்,
ஏதோவொரு ஊக்கத்தை நெஞ்சிலேற்றி
சஞ்சலங்களைத் துடைத்தாய்...

பொருள் விளங்காப் பார்வை போல,
மொழியறியாச் சூழல் போல,
இன்றுநம் உறவின் அர்த்தம் புரியாமல்தவிக்கிறேன்.



நட்பெனும் அன்பினிலே அம்பாய் தெம்பாய்
அள்ளி வீசிப்பறந்துபோனாய்.
தவறிப்போன நோக்கப்பிழையிலே என்ன செய்வேன்?
வார்த்தைகள் வலிக்கும்;
மௌனம்அதைவிடவும் அம்பெய்யும் என்பது
தெரிந்தும்விடைகொடுத்தேன்.

நீ நலமாக வாழபிரார்த்திக்கிறேன்.
நீ நயமாகவும்,நியாயமாகவும் நடந்திருப்பாய் என
என்னை நானேதேற்றிக்கொள்கிறேன்.

நீ வாசிக்காதஎன் பக்கங்களில்உன்னைப் பற்றிய
நல்ல நினைவுகள் மட்டும்இன்னும் அழியாமல் இருக்கின்றன.
நம் நட்பு முடிந்திருக்கலாம்-ஆனால்,
உன் நலனுக்காகவேண்டிக்கொள்ளும்
என் மனம்இன்னும்உன்னிடம் விடைபெறவில்லை.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

அன்பாய் அரவணைத்த அழகான தேவதையே.
வலி சுமந்த என் மகளுக்கு வலி துடைத்து
வழிகாட்டியாய் நின்ற மாமருந்தே

என்னவரின் மறுபிறவி என
எங்கள் நம்பிக்கைக்கு புத்துயிர் தந்த
புன்னகை பூவே



எங்கள் கண்ணீரை புன்னகையாய் மாற்றி
எங்கள் வாரிசை எங்கள் கரங்களில் சேர்த்த
அன்னையின் வடிவமே

மருத்துவ உலகம் போற்றும் மாண்பாளரே
உங்கள் அன்பான சொற்களுக்கும்
உங்கள் அயராத அர்ப்பணிப்புக்கும்
உங்கள் தன்னலமற்ற சேவைக்கும்
இந்த தாயின் ஆயுட்கால நெஞ்சார்ந்த நன்றிகள்.

கடவுள் வானுலகில் என்பார்கள்
அவரை பூவுலகில் கண்டேன் உங்கள் வடிவில்.
என்றென்றும் மறவேன் உங்கள் திருநாமத்தை
மீண்டும் கரம்கூப்பி வணங்குகிறேன்.

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

எண்ணங்கள் ஆயிரம்
எண்ணிப்பார்க்கையிலே
எதார்த்தம் தொலைந்த ஞாபகம்
வார்த்தைகள் வசனங்களாய்
வசைமாறி வருத்தங்களே சாகசம்
உறவோ நட்போ உன்னதமானது
விரிசலின்றி பாதுகாப்போம்
காலம் யாவும் செயற்கையின் (AI)
சாகசமானாலும்
அன்பை தொலைக்காமல்
பழமை மறவாமல்
பரிகாசம் மிகையின்றி
பாசம் நேசம் காப்போம்
மனவலிகளுக்கும் மருந்துண்டு
மனிதநேயம் புனிதமாகட்டும்
புரிதல்தானே உலகின் புதையல்
சிந்திப்போமா.



கவிஞர் வ. சு. கலைவாணி, நெய்வேலி

ஒரு பழைய மௌனம்
வாசலில் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தது!

தெருமுனை நனைத்து
வாசல் நுழையும் முன்
விடைபெற்றுப் கொண்டது
ஐப்பசி மழை!



வாசலுக்கும் தெருமுனைக்கும்
இடையிலான ஊசலாட்டமாய்
அவ்வபோது எட்டிப் பார்க்கிறது
என் மனப்பூனை!

ஒரு கைப்பிடி சுண்டல்
ஒரு குவளை பொங்கல்
ஒரு முடி தேங்காய்
ஒரு கனிந்த வாழைப்பழம்
பதுக்கி வைத்த ஒளியை பரவ விடும்
ஒரு அகல் விளக்கு
இவற்றோடு நடக்கிறது
என் சரஸ்வதி பூஜை!

இருப்பினும்
அள்ள அள்ள குறையாத
அன்பின் வெகுமதியை நிறைகுடமாய் ஏந்தியும்
குடிசை வீட்டு வாசலில்
கோமகள் நீ நுழையாமல்
வீணையோடு
எப்போதும் ஏன் வெகு தொலைவில் நிற்கிறாய்?

நிலைக்கொண்ட தேரை
ஊர் கூடி இழுப்பது இருக்கட்டும்
நீயும் நானும் கூடி
சமத்துவ விளக்கெரிய
முதல் திரிபற்ற வைப்போம்!

அதுவரை
இந்த அன்பின் திரியாவது
அகிலமெங்கும் அணையாது
இருக்கட்டும்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

சாலை ஓரப்பில் கிடந்த
அந்த உருவத்தைக் காண்கிறேன்
சரிந்து கிடக்கிறது தலை

ஒட்டியிருக்கும் வயிறு
என்ன நிறத்தில் அது
இருந்ததென்றே யாருக்கும்
தெரிவிக்காத வேட்டி



இருளடைந்த தோப்பாய்
இறுகிக் கிடந்த தலைமுடி

ஆகாயத்தை அளப்பது போல
மல்லாந்து பார்க்கும் உடல்

நடைபாதை ஓரம் மட்டும்
தனக்குச் சொந்தமென்று

ஒண்டிக் கிடந்த உருவம்

வாழ்வின் பாதி நாளைக்
கழித்துவிட்டுத் தற்போது
வழி தெரியாமல் கிடக்கிறதோ?

யாரையேனும் வரச் சொன்னபின்
வழி பார்த்துக் கிடக்கிறதோ?

வரச் சொன்னவன் மிக விரைவாய்
வந்து சேரட்டுமே!
எவ்வளவு நேரம்
அங்கேயே ஏமாந்திருப்பது?

இல்லை இல்லை
ஏமாந்துக் கிடப்பது?

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

இன்றைய நாட்களில்
சமையலறைகள்
சுத்தத்தின் முகங்களாய்

காரணம் உணவுகள்
இணையவழியில்
இல்லம் சேர்வதால்

அம்மாவின் சமையலறைப்
பாத்திரங்கள் இன்று
தீண்டாமையின் அடையாளமாய்

சமையலறையில் பாத்திரங்களின்
சத்தங்கள் இன்று
ஊமையின் உறக்கமாய்

இணையத்தின் வரவால்
உணவுகள் நெகிழியின்
நோய்க் கிருமிகளாய்

அன்பின் அறைகளாய்
இருந்த சமையலறைகள்
இன்று அமைதியின் மொழிகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

தொடக்கம் எங்கே; தொடர்வது எங்கே?
முடக்கம் எங்கே; முடிவதும் எங்கே?
கடக்கும் பாதையில் கனமும் எங்கே?
மடக்கும் திசையில் மீளுவதும் எங்கே?

இடர்கள் வருவது இணையும் உறவுகளுடன்
கடமைகள் பின்னிய கட்டுப்பாட்டில் நமக்கு!
சூழ்ந்திடும் யாவையும் சுடராய் மாற்றுவோம்
வாழ்க்கை என்னும் வரைபடம் தன்னில்!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

புதுமையான விதவிதமாகப் புவியில் வடிவமாய்
வளைந்த வண்ணமாய் வசதியாய் உருவாகினேனே
பலரது ஓய்விற்குப் பக்கதுணையாய்
சிலரது பயன்பாட்டில் சிதைந்தது உருவம்

தினமும் பயன்படுத்தும் திண்மையான வண்ணம்
மனமும் மகிழும் மட்டில்லா நினைவில்
பெரியவர் சிறியவர் வேறுபாடு கொள்ளாமல்
உரியவர் நலனில் உண்மையாய் நிலைக்குமே

காலமெல்லாம் உழைக்கும் கருத்தான பாதுகாப்பு
உலகெங்கும் வலம்வரும் உயரிய நன்மையாய்
திருவிழா நாட்களில் திரளும் மாந்தர்க்கு
உருவம் அமர்ந்திட உருவாகினேன் மென்மையாய்



பிறப்பிலும் இறப்பிலும் பிறழாமல் நானும்
சிறப்பாய் நிற்பேன் சிறுவர்க்கு முதலாய்
வழிபாட்டுத் தலங்களில் வசந்த நிலையாய்
செழிப்பான வரிசையில் செல்லும் இடமெங்கும்

அன்றாடம் பழகுபவர் அன்பாய் தினமும்
நன்றாக உறவாடும் நட்பின் இலக்கணமே
நம்பிக்கைக் கூட்டிடும் நல்லோர் உறவில்
செம்மையான எதிர்காலம் செழிப்பாய் நீடிக்குமே

பயன்பாடு நிறைந்த பகுத்தலங்கரிப்பில்
நயமான உணர்வில் நன்மையும் நல்குமே
பயன்படுத்தி முடிந்ததும் பகுத்துப் பார்க்காமல்
அயலாரைப் போலவே அமையின்றிப் பேசுவரே

பிள்ளை முதலாய் பின்தொடர்ந்த உறவுகள்
ஒருக்கட்டம் ஒதுங்கி ஒற்றுமையைக் குலைப்பரே
சிந்தித்துப் பார்க்காமல் சிறிதும் யோசனையின்றி
வந்ததைப் பேசியே வம்பும் இழுப்பரே

விட்டுக் கொடுத்தவர் கெட்டுப் போவதில்லை
நாட்டிடும் ஓர்நாள் நம்பிக்கை விதையாய்
கூட்டுக் கிளியைக் கூட்டாகச் சிதைக்காமல்
தன்னலம் மறந்து தன்னிறைவு பெறுவோமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

வாசிப்பனுபவம்



கவிக்குடில் பதிப்பகம் சமீபத்தில் வெளியிட்ட கவிஞர் திரு. சிவ சபாபதி ஐயா அவர்களின் "நீரிழந்த நதிகள்" கவிதைத் தொகுப்பைப் பெற்றேன்.

பதிப்புரையில் கவிஞர் திரு. நாகை ஆசைத்தம்பி ஐயா அவர்கள், இந்தக் கவிதைத் தொகுப்பு சூழியல் கவிதைத் தொகுப்பு மட்டுமல்ல; சமூகச் சிந்தனையோடு எழுதப்பட்ட கவிதைத் தொகுப்பு என்று குறிப்பிடுகிறார்.

வாழ்த்துரையில் கவிஞர் திரு. ஜே. பி. நீக்கிழார் ஐயா அவர்கள், "ஒரு மாணவனின் இயக்கத்தைப் போல, கருப்பையில் இருக்கும் ஒரு குழந்தையைப் போல இவரது கவிதை இருக்கிறது" என்று வாழ்த்துகிறார்.

என்னுரையில் இந்நூலின் ஆசிரியர் கவிஞர் திரு. சிவசபாபதி அவர்கள், "என் சிந்தனையிலும், என் உணர்வுகளிலும் என்றும் உயிரோட்டமாயிருக்கும் அன்னைத் தமிழ்தான் என் எழுத்தின் உண்மையான தூண்டுகோல்" என்கிறார்.

இக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் மென்பொருள் பொறியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தாலும், கவிதை மீதும் தமிழ் மீதும் இலக்கியத்தின் மீதும் பேராவல் கொண்டுள்ளதை இவரது கவிதைத் தொகுப்பு நமக்குச் சொல்கிறது.

"கடுகுச் சிறுத்தாலும் காரம் குறையாது" என்கிறது போல, "நீரிழிந்த நதிகள்" கவிதை நூல் கையடக்க நூலாக இருந்தாலும், இந்த உலகத்தைத் தனது கவிதையால் கொஞ்சம் அளக்கிறது.

கவிதைகள் ஒவ்வொன்றும், மரங்கள் நிழலைக் கொண்டு நம்மைப் பிடிப்பது போல் கவிதை வரிகளால் நம்மைக் கட்டிப்போட்டு விடுகிறது.

கவிஞர் இரா. மதிராஜ்

"வந்தோரைச் சிறை பிடிக்காது
கிளை விரித்தே வரவேற்கிறது
மரம்" - எத்தனை அருமையான கவிதை வரிகள்!
நத்தை நடப்பதை நாம் பல முறை பார்த்திருக்கிறோம். கவிஞரின் பார்வையில் நத்தை எப்படி நடக்கிறது தெரியுமா?

"குடிலோடு நடந்து
நாடோடியாய் வாழும் நத்தை" - தனது வரிகளால் நத்தையின் வாழ்க்கையை அர்த்தமாக்குகிறார் கவிஞர்.
எளிய மனிதர்களைப் பார்த்துப் பரிதவிக்கிறோம்; உயிரினங்களைப் பார்த்தும் பரிதவிக்கிறோம்.

இந்தக் கவிஞர் ஒரு படி மேலே போய்,
"பாவம், நடக்கத் தெரிந்திருந்தால் நகர்ந்திருக்குமோ
மரம்" என்று மரத்தின் மீது கவிஞர் கொண்ட பார்வை சிலிர்க்க வைக்கிறது; சிந்திக்க வைக்கிறது. இயற்கையின் ரசனை...

புரட்சியாளர்கள், போராட்டக்காரர்கள், வன்முறையாளர்கள், அவர்கள் வேறு யாரும் அல்ல!

எவ்வளவு வன்மம்!

"என் கை விரல்களுக்கு ஒரு நாள்
வாழ்ந்து மகிழும்
மலர்களையும்
பறிக்க எத்தனிக்கிறது"

என்று பூக்களைப் பறிப்பவர்களைக் கவிதைச் சாட்டைகளால் சாடுகிறார் கவிஞர்.

இப்படி சமூகப் பார்வை, இயற்கை, காதல், வாழ்க்கை என அத்தனைப் பாடுபொருளிலும் கவிதை பாடி அசத்தியிருக்கிறார் கவிஞர்.

மொத்தத்தில், "நீரிழந்த நதிகள்" மென்மையாகப் போராடுகிறது. இந்த மானிட சமூகம் இயற்கையை நேசியுங்கள் என்று கூவுமிக்க கவிஞரின் கவிதைத் தொகுப்பு வெற்றி பெற வாழ்த்துகள்!

தொடர்ந்து எழுதுங்கள். தமிழ்த்தாய் உங்கள் கவிதைகளில் பவனி வரட்டும்!



கட்டுரை

பிறப்பும் இளமைக் காலமும்



கவிஞர் வாணிதாசன் 1915 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ஆம் நாள் புதுச்சேரிக்கு அருகிலுள்ள வில்லியனூரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் அரங்க திருக்காமு, துளசியம்மாள் ஆவர். இவருடைய இயற்பெயர் அரங்கசாமி. எத்திராசலு என்ற பெயராலும் அழைக்கப்பட்டார்.

இளமைக் காலத்திலேயே தமிழ்மொழி மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய இவர், தமிழ் மற்றும் பிரெஞ்சு மொழிகளிலும் புலமை பெற்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் பயின்றது இவருடைய இலக்கிய வளர்ச்சியில் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

பாரதிதாசனின் தமிழ்ப்பற்று, சமூகச் சிந்தனை, மொழியுணர்வு ஆகியவை வாணிதாசனின் கவிதைப் பயணத்திற்கு வழிகாட்டின. ஆரம்பத்தில் 'ரமி' என்ற புனைப்பெயரில் எழுதிய இவர், பின்னர் 'வாணிதாசன்' என்ற பெயரில் புகழ்பெற்றார். கலைவாணியின் தொண்டன் என்ற பொருளை உணர்த்தும் வகையில் இப்பெயர் அமைந்தது.

ஆசிரியர் பணி

வாணிதாசன் கவிஞராக மட்டுமல்லாமல் சிறந்த ஆசிரியராகவும் விளங்கினார். 1937 ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் சேர்ந்த இவர், ஏறத்தாழ 34 ஆண்டுகள் கல்விப் பணியாற்றினார்.

கட்டுரை

இலக்கியப் பயணமும் கவிதைத் தனித்துவமும்

வாணிதாசனின் இலக்கியப் பயணம் 1935 ஆம் ஆண்டில் தொடங்கியது. பாரதியாரின் நினைவு நாளை முன்னிட்டு எழுதிய கவிதை இவருடைய தொடக்ககாலப் படைப்புகளில் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து கவிதைகள், குறுங்காப்பியங்கள், குழந்தைப் பாடல்கள், மரபுக் கவிதைகள் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் தமது திறமையை வெளிப்படுத்தினார்.

அவருடைய கவிதைகளில் இயற்கை அழகு தனிச்சிறப்புடன் இடம்பெற்றுள்ளது. இயற்கையை வெறுமனே வர்ணிப்பதோடு நின்றுவிடாமல், இயற்கையின் வழியாக மனித வாழ்க்கைக்குத் தேவையான நல்லுணர்வுகளையும் எடுத்துரைத்தார்.

முக்கியமான படைப்புகள்

வாணிதாசன் பல்வேறு இலக்கியப் படைப்புகளைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார். அவற்றுள் சில குறிப்பிடத்தக்கவை:

1. தமிழச்சி (1949)
2. கொடி முல்லை (1950)
3. தொடுவானம் (1952)
4. எழிலோவியம் (1954)
5. வாணிதாசன் கவிதைகள் (1956)
6. பொங்கற்பரிசு (1959)
7. தீர்த்த யாத்திரை (1959)
8. இன்ப இலக்கியம் (1959)
9. குழந்தை இலக்கியம் (1959)
10. சிரித்த நுணா (1963)
11. இரவு வரவில்லை (1963)
12. பாட்டு பிறக்குமடா (1963)



13. இனிக்கும் பாட்டு (1965)
14. எழில் விருத்தம் (1970)
15. பாட்டரங்கப் பாடல்கள் (1972)

தமிழ்ப்பற்றும் சமூகச் சிந்தனையும்

வாணிதாசன் தமிழ்மொழியின் மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்தார். தமிழின் தொன்மை, இனிமை, இலக்கிய வளம் ஆகியவற்றைப் போற்றிப் பாடினார். தமிழ்மொழி வளர வேண்டும், தமிழர்கள் தங்கள் மொழியின் பெருமையை உணர வேண்டும் என்ற உயரிய நோக்கம் அவருடைய கவிதைகளில் வெளிப்படுகிறது. அதேவேளையில், சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகள், ஏற்றத்தாழ்வுகள், சாதிய வேறுபாடுகள் போன்றவற்றை எதிர்க்கும் முற்போக்குச் சிந்தனைகளையும் தனது படைப்புகளில் வெளிப்படுத்தினார். மனிதநேயம், சமத்துவம், உழைப்பின் மேன்மை, பெண்களின் முன்னேற்றம், கல்வியின் அவசியம் போன்ற கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்தார்.

பாரதிதாசனின் தாக்கமும் தனித்துவமும்



பாவேந்தர் பாரதிதாசனைத் தனது இலக்கிய வழிகாட்டியாகக் கொண்டிருந்த வாணிதாசன், அவருடைய கவிதை மரபைப் பின்பற்றியபோதும் தனக்கெனத் தனித்துவமான பாணியை உருவாக்கினார். வாணிதாசனின் கவிதைகளில் இயற்கை வர்ணனைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் அவரைத் தனித்துவமாக அடையாளப்படுத்தியது. இயற்கையைப் பாடுவதில் ஆங்கிலக் கவிஞர் வேர்ட்ஸ்வொர்த்துடன் ஒப்பிடப்பட்டார். அதனால் இவர் 'தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்' என்று சிறப்பிக்கப்பட்டார்.



விருதுகளும் சிறப்புப் பெயர்களும்

வாணிதாசனின் தமிழ்த்தொண்டும் இலக்கியப் பணியும் பல்வேறு அமைப்புகளால் பாராட்டப்பட்டன. 'கவிஞரேறு', 'பாவலர்மணி', 'பாவலர் மன்னன்', 'புதுமைக் கவிஞர்' போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார்.

1972 ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றம் இவருக்குப் பொன் மோதிரம் வழங்கிச் சிறப்பித்தது. 1973 ஆம் ஆண்டு புதுவைத் தமிழ்ச் சங்கம் வெள்ளிக் கேடயம் வழங்கிப் பாராட்டியது. இவருடைய படைப்புகள் பின்னாளில் நாட்டுடைமையாக்கப்பட்டன. இதன் மூலம் இவருடைய இலக்கியச் செல்வங்கள் பரந்த வாசகர் வட்டத்தைச் சென்றடைந்தன.

மொழிபெயர்ப்புப் பணியும் பன்முகத் திறமையும்

வாணிதாசன் கவிதை எழுதுவதோடு மட்டுமல்லாமல் மொழிபெயர்ப்புப் பணியிலும் ஈடுபட்டார். பிரெஞ்சு மொழியிலிருந்து சில படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். குறிப்பாக விக்டர் ஹியூகோவின் 'ஆன்ழெல்லோ' நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தது அவருடைய பன்மொழிப் புலமைக்குச் சான்றாகும். கவிதை, காப்பியம், குழந்தை இலக்கியம், மொழிபெயர்ப்பு எனப் பல துறைகளில் தனது திறமையை வெளிப்படுத்தியவர்.

மறைவு

கவிஞரேறு வாணிதாசன் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

அகர முதல இலக்கியப் பேரவை

தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு!

நாளை நமதே

மனித குலத்திற்கு உழைத்தல் என்பது
இயல்பான குணமானால்தான்
மண்ணை விண்ணகம் ஆக்கலாம்.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தூலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்புக்கு :

9597887847
8870884969

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com